**தலைப்பு 271 திருகோணமலை, மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 271 திருகோணமலை, மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 28 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 432.00 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 420.72 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 11.28 மில்லியன் அல்லது 2.61 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 378.00 | 367.20 | 10.80 | 2.86 |
| மூலதனம் | 54.00 | 53.52 | 0.48 | 0.88 |
| மொத்தம் | **432.00** | **420.72** | **11.28** | 2.61 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு ஏனைய 17 அமைச்சுக்கள் மற்றும் 10 திணைக்களங்களால் ரூபா 2,917.61 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 2,768.34 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 149.27 மில்லியன் அல்லது 5.12 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியான எல்லை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26.00 | 25.80 | 16.00 | 21.89 | 100 | 78.50 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 95.06 மில்லியன் கூட்டு மொத்தமாகும். விபரம் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0104/000 | 6.67 |
| 6000/0000/00/0013/0070/000 | 9.39 |
| 6000/0000/00/0014/0011/000 | 1.49 |
| 6000/0000/00/0016/0052/000 | 77.51 |
| மொத்தம் | **95.06** |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கை, ஏடுகள் என்பவற்றின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேலே 1.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
| --- | --- | --- | --- |
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களால் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | 07 பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்**

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பித்த ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கு 2017 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரை பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அக் கணக்காய்வு ஐய வினா தொடர்பான கணிப்பிடப்படக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 6,536,677 ஆகும்..

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டுக் முரண்**

05 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 21 சதவீதத்திலிருந்து 71 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

**3.4 ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு**

**3.4.1 சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகாரம் தொடர்பான அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் செயற்திட்டம்**

(i) குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொட்டடி கந்தசாமி மலை வீதியினை அபிவிருத்தி செய்தல் தொடர்பான பௌதீகப் பரிசோதனையின் போது நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தூரம் 1300 மீற்றர்களுக்காகச் செலுத்த வேண்டிய பணம் ரூபா 1,056,364 ஆக இருந்த போதிலும் 2,100 மீற்றர் தூரத்திற்காக ரூபா 1,603,855 செலுத்தப்பட்டதன் காரணமாக நிர்மாண வேலைகள் செய்யப்படாத 800 மீற்றர் தூரம் தொடர்பாக ரூபா 547,491 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) குச்சவெளி பிரதேச செயலகத்திற்குரிய வீரச்சோலை உள்ளக வீதியை அபிவிருத்தி செய்யும் போது மதிப்பீட்டின் பிரகாரம் வீதியின் மத்திய பகுதிக்கு தொடக்க தார் இடுதல் கற்கள் வழங்குதல் முதலாம் மற்றும் இரண்டாம் தார் இடுதல் என்பன இடம் பெற்றிருக்கவில்லை. அது பற்றி தொழில்நுட்ப உத்தியோகத்தர் உறுதிப்படுத்தலிலிருந்தும் 90 தூர அடிக்காக ரூபா 112,050 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குச்சவெளி பிரதேச செயலகத்திற்குரிய பரயன்தரு கந்தசாமி மலை வீதியை அபிவிருத்தி செய்யும் போது நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 775 மீற்றர் தூரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 512,925 ஆக இருந்த போதிலும் வீதியின் தளத்தை தயார்படுத்துதல், கிரவல் வழங்குதல், கிரவலை பரப்புதலும் அமுலாக்குதலும் என்பன செய்யப்பட்டிருக்கவில்லை. அது பற்றி

தொழில்நுட்ப உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியிருந்தும் 1210 மீற்றர் தூரத்திற்காக ரூபா 777,086 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க நிர்மாண வேலைகள் செய்யப்படாத 435 மீற்றர் தூரத்திற்காக ரூபா 264,161 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வாழ்வாதார செயற்திட்டம்

(i) மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்காக வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களை அமல்ப்படுத்துவதற்கு முன்னர் மக்களை மீள்குடியேற்றுதல் இடம்பெற்றிருக்க வேண்டும். எனினும், 2016 ஆம் ஆண்டின் போது இதற்கு முரணாக முதூர் பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த சம்பூர் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீள் குடியேற்றப்படாத 07 குடும்பங்களுக்கு ரூபா 700,000 பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்கும் போது அவற்றைப் பயன்படுத்துவதற்கு போதியளவு நீர் வசதிகளுடன் மக்களுக்கு உரிய நலன்கள் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இதற்கு முரணாக மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சம்பூர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீர் வசதிகள் இல்லாத 09 நலன் பெறுகைகளுக்காக ரூபா 900,000 பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சம்பூர் கிராமகிரதம உத்தியோகத்தர் பிரிவில் மீள்குடியேற்றப்பட்ட 04 குடும்பங்களுக்கு 2016 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 400,000 பெறுமதியான விவசாய உபகரணங்கள் விற்கப்பட்டிருந்தன.

(iv) மாவட்ட செயலகத்தினால் 2016 யூன் 23 ஆந் திகதி வழங்கப்பட்ட JAT/EST/RESET/LIVE/2016 ஆம் இலக்க கடிதத்தின் iv பந்தியின் பிரகாரம் வாழ்வாதார செயற்திட்டங்களுக்காக நலன்பெறுனர்களுக்கு வழங்கப்படுகின்ற மிருகங்களைவ விற்றல் அல்லது ஏனையவர்களுக்கு ஒப்படைத்தல் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக கிண்ணியா பிரதேச செயலகத்தின் 03 கிராம சேவையாளர் பிரிவின் 07 நலன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 700,000 பெறுமதியான 07 பசுக்கள் விற்கப்பட்டிருந்தன.

**3.4.2 விளையாட்டுத்துறை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடுகளின் கீழ் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான பரிசோதனை**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணிக்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்ட பதவி சிறீபுர பிரதேச செயலகத்திலுள்ள ஜயந்திவெவ பொது விளையாட்டு மைதானம் 2017 யூலை 31 ஆந் திகதி வரை விளையாட்டிற்காகப் பயன்படுத்தப்படாமையின் காரணமாக அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 788,519 தொகை விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

**3.4.3 விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஏற்பாட்டிலிருந்து கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பரிசோதனை**

சேருவில பொது மக்கள் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது மண் நிரப்புவதற்காக ரூபா 844,200 செலுத்தப்பட்டிருந்த போதிலும் வெளியிலிருந்து மண் கொண்டு வந்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கற்களை அகற்றுதல், சமப்படுத்தல் என்பவற்றிற்காக ரூபா 64,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை கற்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 11,088,121 கூட்டுமொத்தமான 169 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

27101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் வடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 3,746,490 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் இந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 01 ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் வரையான கால வீச்சினைக் கொண்டிருந்த போதிலும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமாக நிலையில் காணப்பட்டது.

(ஆ) ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களின் முற்பண மீதியை மீளப்பெற்றுக்கொள்வது சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 1996 - 2015 காலப்பகுதியில் ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 318,735 கடன் மீதிகள் 2016 ஆம் ஆண்டின் போது அசைவற்ற கடன் மீதியாகக் காணப்பட்டது.

(இ) 2006 - 2016 காலப்பகுதியின் போது சேவையை விட்டுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,102,045 கடன் மீதிகளை அறவீடு செய்வது சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போதும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்குச் செலுத்த வேண்டிய உச்ச அளவான இடர்கடன் ரூபா 250,000 ஆக உள்ள போதிலும் அதற்கு முரணாக வெருகல பிரதேச செயலகத்திலுள்ள ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 296,370 தொகையும் மாவட்ட செயலகத்தின் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 285,740 தொகையும் இடர்கடனாக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தன.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் 2009 ஆம் ஆண்டின் போது பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட 14 மோட்டார் சைக்கிள்கள், 04 கெப் வாகனங்கள், ஒரு ஜீப் வண்டி, ஒரு லொறி என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு அல்லது புதுப்பித்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2010 திசெம்பர் 10 ஆந் திகதி இடர் முகாமைத்துவ அமைச்சிடமிருந்து பதவி ஸ்ரீபுர பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப் பெற்ற நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை அலுவலக வளவில் பொருத்துவதற்காக தேவையான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 154,825 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 யூலை 20 ஆந் திகதி வரை அந்த இயந்திரமும் கட்டிடமும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94 | 444,687 | நிதிஏற்பாட்டை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371 | 236,594 | குச்சவெளி பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர்களுக்கு 10 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த குறித்த நோக்கத்திற்கான முற்பணங்கள் ஒரு மாத காலம் தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. |
| (இ) | நிதிப்பரமாணம் 880 | - | சேருவில பிரதேச செயலகத்தில் பிணை வைப்புச் செய்ய வேண்டிய 06 உத்தியோகத்தர்களால் பிணை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குரிய 07 வாகனங்கள் 2002 – 2014 இற்கு இடைப்பட்ட காலத்தின் போது விபத்துக்குள்ளாகியதன் காரணமாக ரூபா 2,706,380 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அவை தொடர்பான விசாரணை முடிவுறுத்தப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் போது திறைசேரி நானாவித முற்பணக் கணக்கின் கீழ் கொள்வனவு செய்வதற்காக ச.தொ.ச நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,652,916 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

| கணக்காள்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | **ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைச் சட்டரீதியாகப் பொறுப்பேற்காமை** |
| 2014 | 3.9 (அ) | 2011 ஒக்தோபர் மாதம் வரை மாவட்ட செயலகம் செயற்பட்டு வந்த திருகோணமலை போர்த்துக்கீச கோட்டையில் 372 ஏக்கர் காணியும் அதில் அமைந்துள்ள கட்டிடங்களும் வீடுகளும் உள்ளடங்களாக தொல்லியல் காணியாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் உரிமையை ஒப்படைக்குமாறு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் 2011 சனவரி 04 ஆந் திகதிய M/EP/1/7A ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியிருந்தும் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 3.9(ஆ) | திருகோணமலை மாவட்ட செயலகம் அமைந்துள்ள காணி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட போதிலும் அதன் சட்டரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு 2017 ஆகஸ்ட் மாத வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 03.13(இ) | வில்கம காட்டின் மத்தியிலுள்ள சுற்றாடல் பூங்காவைச் சுற்றி யானை வேலியை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த உபகரணங்கள் பாதுகாப்பின்றி விளைவற்றுக் காணப்பட்டது. தற்பொழுது உரிய சம்பந்தப்பட்ட சுற்றாடல் பூங்காவை நிர்மாண வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. |

**3.11 முகாமைத்துவ பலவீனங்கள்**

(அ) 1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் காணிகளைச் சுவீகரிக்கும் போது காணி உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு முன்னர் அவர்கள் மரணமடைந்திருத்தால் உரிய செலுத்த வேண்டிய பணத்தை மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது அருகிலுள்ள நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த கோபாலபுரம் கடற்படை முகாமிற்காகச் சுவீகரிக்கப்பட்ட காணிக்கான இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்ற இரண்டு நலன்பெறுனர்கள் மரணமடைந்திருந்தும் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 15,400,000 இற்காக 02 காசோலைகள் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பெயரில் எழுதி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2011 இன் 49 ஆம் இலக்க கரையோரம் பேணல் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 31 (எ) மற்றும் (ஏ) பிரிவுகளின் பிரகாரம் களப்பினை அண்மித்த பிரதேசங்களில் அபிவிருத்திச் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போது கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளப்படாது கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச செயலகங்களிலுள்ள

களப்புவை அண்மித்த பிரதேசங்களில் விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்தல் மற்றும் மண் நிரப்புதல் விடயங்களுக்காக அப்பிரதேச செயலகங்களால் ரூபா 6,903,366 பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வன பாதுகாப்பு எல்லைக்குள் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் அதற்காக வன பாதுகாப்புத் திணைக்களத்தின் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கிண்ணியா பிரதேச செயலகத்தில் காக்கா முனை விளையாட்டு மைதானமானது வன பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான கடொலான பாதுகாப்பு எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணியனர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 40 | 35 | 05 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 36 | 15 | 21 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 825 | 495 | 330 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 145 | 119 | 26 |
| | மொத்தம் | 1046 | 664 | 382 |

(ஆ) மொழி பெயர்ப்புச் சேவையில் 12 உத்தியோகத்தர்களிற்கான வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக 02 இற்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் இந்த மாவட்டத்திலுள்ள மக்களுக்கு போதியளவு சேவையை வழங்குவதற்குத் தடையாகவுள்ளது.